# 6. விலைகளும் கூலிகளும்

## 6.1 விலைகள்

1998இன் பிற்பகுதியிலிருந்து அவதானிக்கப்பட்டு வந்த விலைப் பணவீக்கத்தின் வீழ்ச்சியுறும் போக்கின் நேர்மாற்றமொன்றை அது எடுத்துக்காட்டியமையினால் 2000ஆம் ஆண்டானது விலை அசைவுகள் தொடர்பாக கவனத்திற் கொள்ள வேண்டிய ஆண்டொன்றாக விளங்கியது. அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலை அதிகரிப்பு போன்ற பாதகமான வெளிநாட்டுக் காரணிகளின் முதன்மைக் காரணத்தினால் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் உள்நாட்டு விலைகளில் அதிகரித்த அழுத்தத்துடன் 1999 முழுவதிலும் காணப்பட்ட சாதகமான சூழல் 2000ஆம் ஆண்டின் தொடக்கம் வரை தொடர்ந்து பின்னர் மாற்றமடையத் தொடங்கியது. உணவுப் பொருட்கள் பலவற்றின் அதிகரித்த உற்பத்தி, நுகர்வோர் பொருட்கள் சம்பந்தமாக மேம்பட்ட தகவல்கள் மற்றும் விநியோக முறைகள் மற்றும் முன்மதியுடைய நாணய முகாமைத்துவம் போன்ற உள்நாட்டுக் காரணிகள் சாதகமாகக் காணப்பட்டபோதும் வெளிநாட்டுக் காரணிகளிலிருந்து உருவாகும் பணவீக்க அழுத்தங்களை அவற்றினால் முழுமையாகக் கட்டுப்படுத்த இயலாது காணப்பட்டது. உள்நாட்டிலும்கூட சம்பள அதிகரிப்புக்கள் போன்ற காரணிகள் விலைகளின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தின.

குறிப்பாக ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் உள்நாட்டு விலைகளில் பாதிப்பை ஏற்படுத்திய அதி முக்கிய காரணியாக விளங்கியது அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலையாகும். 1990இல் குவைத் யுத்தத்தின் பின் உலக சந்தையில் மசகெண்ணெய்யின் விலை அதனது உச்சமட்டத்தை எய்தியது. முக்கிய உணவு இறக்குமதிகளின் உலக சந்தை விலைகளும் பாதகமாக மாற்றமடைந்தன. 1999இல் வீழ்ச்சியடைந்து உள்நாட்டு விலைகளின்மீது ரூபாவின் பெறுமதித் தேய்வின் அழுத்தத்தை இல்லாமல் செய்த அரிசி, கோதுமைமா, சீனி என்பனவற்றின் விலைகள்

**அட்டவணை 6.1**
**முக்கிய இறக்குமதிகளின் உலக விலைகள் (ஐ.அ.டொ.)**
1998-2000

| விடயம் | அலகு | 1998 | 1999 | 2000 | மாற்றம் % | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1999 | 2000 |
| அரிசி | மெ.தொ. | 251.2 | 215.8 | 262.3 | -14 | 22 |
| சீனி | மெ.தொ. | 290.8 | 221.6 | 251.6 | -24 | 14 |
| கோதுமைத் தானியம் | மெ.தொ. | 144.4 | 129.1 | 137.8 | -11 | 7 |
| வளமாக்கி | மெ.தொ. | 140.0 | 123.1 | 142.6 | -12 | 16 |
| மசகெண்ணெய் | பீப்பாய் | 13.7 | 19.1 | 28.7 | 40 | 51 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

2000ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் மெதுவாக அதிகரிக்கத் தொடங்கி ஆண்டின் இறுதிப் பகுதியில் விரைவடைந்தன. இதே வேளையில் குறிப்பாக இரண்டாம் அரைப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபா உயர்ந்த வீதமொன்றில் பெறுமானத் தேய்வடைந்ததுடன் சென்மதி நிலுவையில் காணப்பட்ட பாரிய பற்றாக்குறையிலிருந்து உருவான அதிகரித்த அழுத்தத்தின் காரணமாக 1999இன் 6சதவீத ஆண்டுப் பெறுமானத் தேய்வுடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 10 சதவீத ஆண்டுச்சராசரி பெறுமானத் தேய்வினை விளைவித்தது.

வெளிநாட்டுத்துறையில் இந்த அனைத்து நிகழ்வுகளும் அதிகரித்துச் செல்லும் உள்நாட்டு விலைகளின்மீது குறிப்பாக ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் நேரடியானதும் அதேபோன்று மறைமுகமானதுமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. கோதுமை மா, மண்ணெண்ணெய், டீசல் என்பனவற்றின் நிருவகிக்கப்பட்ட விலைகள் உதவிக் கொடுப்பனவு மட்டத்திலேயே பேணப்பட்டமையினால் அரசதுறை கடன்பாடுகளின்மீது அவற்றின் அழுத்தமும் அதிகரிக்கத் தொடங்கியது. இந்த நிலைமையானது இவ்வாண்டில் நிருவகிக்கப்பட்ட விலைகளை பல சுற்றுக்களில் மேல்நோக்கித் திருத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. திரவப் பெற்றோலிய வாயு விலைகளின் மேல் நோக்கிய திருத்தமும் இந்த நிகழ்வுகளுக்கு மேலதிக பரிமாணத்தை வழங்கியது. குறிப்பாக டீசல், திரவப் பெற்றோலியவாயு, மற்றும் உலையெண்ணெய் என்பவற்றின் விலைகளின் அதிகரிப்புக்களின் காரணமாக, போக்குவரத்துப் பணிகள் மின் கட்டணங்கள், உணவு அல்லாப் பொருட்கள், மற்றும் தயாரிக்கப்பட்ட உணவையும் உள்ளடக்கிய உணவு விடயங்களிலும் தொடர்ச்சியான அதிகரிப்புக்களை ஏற்படுத்தியது. இதன்படி வெளிநாட்டுக் காரணிகள் உள்நாட்டு விலை அதிகரிப்புக்களில் பல்பரிமாண தாக்கங்களைக் கொண்டிருந்தன.

விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு பல உள்நாட்டுக் காரணிகள் சாதகமாகப் பங்களிப்புச் செய்தன. 1999இன் மிகச்சிறந்த அறுவடையின் ஓரளவு காரணத்தினால் 2000ஆம் ஆண்டில் நெல்லினதும் அரிசியினதும் விலைகள் வீழ்ச்சியடையத் தொடங்கின. 1999இன் பிற்பகுதியில் 35 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்குத் தீர்வை குறைக்கப்பட்டமையைத் தொடர்ந்து அரிசி இறக்குமதிகளிலும் அதிகரிப்பு ஒன்று காணப்பட்டது. உற்பத்தி வீழ்ச்சியின் மத்தியிலும் அதிகரித்த இறக்குமதிகளின் காரணமாக பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய் என்பனவற்றின் விலைகள் வீழ்ச்சியடைந்தன.

பயிர் செய்யப்பட்ட பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் இனக் கலப்புப்பயிர்கள் மற்றும் ஏனைய உள்ளீடுகள் போன்றவற்றின் காரணமான அதிஉயர் விளைச்சலின் காரணமாக தேங்காய் மற்றும் சிலவகை மரக்கறி வகைகள் போன்ற வேறு பல நுகர்வுப் பொருட்களின் விலைகளும் வீழ்ச்சியடைந்தன. உற்பத்திப் பிரதேசங்களின் சாதகமான வானிலை என்பனவும் இந்த விரிவாக்கத்திற்கு உதவின. பாரிய மொத்த மற்றும் சில்லறை விற்பனைச் சந்தைகள் தொடர்பாக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் மூலமாகத் தொடர்ந்தும் தகவல்கள் பரபப்பட்டமையும் குறிப்பாக விவசாய உற்பத்திப் பொருட்கள் தொடர்பான தகவல் மற்றும் விநியோக வழிகளை மேம்படுத்த உதவின. நேரகாலத்துடனேயே தகவல்கள் கிடைக்கக் கூடியதாக இருந்தமையானது இடைத் தரகர்களின் இடையீட்டின் பல கட்டங்களைத் தவிர்த்து விவசாய உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் பிரதேசங்களிலிருந்து நேரடியாகவே பெற்றுக்கொள்ளுவதற்கு விவசாய உற்பத்திப் பொருட்களின் வர்த்தகர்களை ஊக்குவித்தது. இந்த நிகழ்வுகளானது உற்பத்தியாளர் விலைகளை மேம்படுத்தவும் சில்லறை விலைகளை உறுதியாகப் பேணுவதற்கும் உதவின. எனினும் பருவகால மிகை உற்பத்தியின்போது விலைகளின் கடுமையான வீழ்ச்சி தொடர்பாக உற்பத்தியாளர்கள் முறைப்பாடு செய்யத் தொடங்கினர். ஊதியம் மிக்க உற்பத்தியாளர் விலைகளை உறுதிப்படுத்துவதில் அரசாங்கத்தினால் தொடக்கி வைக்கப்பட்ட கொள்வனவு முறைகள் முழுமையா பயனைத் தராமையினால் 1999இல் பரீட்சிப்பு அடிப்படையில் முன்னோக்கிய ஒப்பந்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அவற்றின் பிரபல்யம் அதிகரித்தமையானது சில விவசாய உற்பத்திப் பொருட்களின் பாரிய விலைத் தளம்பல்களை குறைப்பதற்கு பெருமளவு வாய்ப்புக்களை வழங்கியுள்ளது. இந்தக் காரணிகள் உணவு விடயங்கள் பலவற்றின் விலை அதிகரிப்பினைத் தணிப்பதற்கும் பங்களிப்புச் செய்தன. 1999இன் 14 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் நாணய விரிவாக்கத்தினை 2000ஆம் ஆண்டில் 13 சதவீதத்தில் கட்டுப்படுத்திய இறுக்கமான நாணயக் கொள்கையானது விலைகளின் மீது உள்நாட்டுக் கேள்வியினால் உருவாகும் அழுத்தத்தை ஆகக் குறைந்ததாக்குவதற்கும் பங்களிப்புச் செய்தன.

வெளிநாட்டுக் காரணிகளுக்கு சுயாதீனமாக உள்நாட்டு விலைகளை உயர்த்துவதற்கு பங்களிப்புச் செய்த உள்நாட்டுக் காரணிகள் பல காணப்படுகின்றன. மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக மீன்உற்பத்தி மெதுவடைந்தது. யப்பான் போன்ற வெளிநாட்டுச் சந்தைகளினால் பாரிய வகையிலான மீன்களுக்கு ஏற்பட்ட உயர்ந்த கேள்வியின் காரணமாக உள்நாட்டுச் சந்தையில் அத்தகைய மீன் வகைகளின் வழங்கலில் ஓரளவு குறைப்பு ஏற்பட்டது. 2000ஆம் ஆண்டில் யப்பானுக்கான மீன் ஏற்றுமதி பெரும்பாலும் மூன்று மடங்கு அதிகரித்தது. இந்தக் காரணிகளின் கூட்டு விளைவானது 1999இனைவிட 2000ஆம் ஆண்டில் பல வகையான மீன்களின் விலைகளை உயர்மட்டத்தில் வைத்திருந்தது.

வெளிநாட்டுக் காரணிகளில் ஏற்பட்ட மாற்றங்களின் கூட்டுவிளைவு, உள்நாட்டுக் காரணிகளில் முக்கிய நுகர்வுப் பொருட்களின் விலைகளில் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் என்பன பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளுடன் இணைந்து 2000ஆம் ஆண்டு மேயின் பின்னர் பணவீக்கத்தின் வீழ்ச்சியுறும் போக்கில் மாற்றமொன்றுக்கு இட்டுச் சென்றன. நுகர்வோர் விலைப் பணவீக்கத்தின் அலுவல்சார் அளவீடான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான பணவீக்க வீதம் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது. மேயின் 3.4 சதவீத தாழ்ந்த மட்டத்திலிருந்து யூனில் 3.7 சதவீதமாகக் காணப்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் பதிவு செய்யப்பட்ட ஆண்டுச் சராசரி பணவீக்கவீதம் 6.2 சதவீதமாக இருந்தது. 1999இல் இது 4.7 சதவீதமாக இருந்தது. 2000ஆம் ஆண்டில் இந்த உயர் பணவீக்கத்துக்கும் பங்களிப்புச் செய்த காரணிகளாக உணவு, எரிபொருள், வெளிச்சம் மற்றும் பல்வகை விடயங்கள் என்பன விளங்கின. இவ்வாண்டில் ஒவ்வொரு துணைத்துறையினதும் பங்களிப்பின் தனித்தனியான பங்கு முறையே 52, 21 மற்றும் 26 சதவீதமாகக் காணப்பட்டது. இவ்வாண்டில் பல சுற்றுக்களில் சக்திவலு விலைகளின் திருத்தமானது எரிபொருள் வெளிச்சம் வகையின் பங்களிப்பினை 1999இன் 2 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் அதி உயர் 21 சதவீதத்திற்கு அதிகரிக்கச் செய்தது.

நுகர்வோர் விலை பணவீக்கத்தின் மாற்று அளவீடுகளான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைவிட விரிவான புவியியல் உள்ளடக்கத்தைக் கொண்ட மத்திய வங்கியினால் கணிப்பீடு செய்யப்பட்ட கொழும்பு மாவட்ட நுகர்வோர்விலைச் சுட்டெண்ணும் தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிப்பீடு செய்யப்பட்ட பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் பதிவு செய்யப்பட்டதைவிட பொதுவான விலை அசைவுகளில் ஓரளவு வேறுபட்ட நிகழ்வுகளைக் குறித்துக்காட்டின. முக்கிய நுகர்வு விடயங்களின் சார்புரீதியான நிறைகளின் வேறுபாடுகளையும் அதேபோன்று இந்தச் சுட்டெண்ணினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சந்தைகளின் விலை அசைவுகளையும் இது பிரதிபலிப்பதாக இருந்தது. குறிப்பாக கொழும்பு மாநகரில் உணவு விலைகளின் சராசரி அதிகரிப்பானது கொழும்பு மாவட்ட நேரிணையான. விலை

அட்டவணை 6.2
ஆண்டுச் சராசரி விலை மாற்றங்கள் (%)

| ஆண்டு | கொ.நு. வி.சு. | கொ.பெ.நு. வி.சு. | கொ.மா.நு வி.சு | மொ.வி. | மொ.தே.சு. |
|---|---|---|---|---|---|
| 1980 | 26.1 | - | - | 33.7 | 18.2 |
| 1981 | 18.0 | - | - | 17.0 | 20.6 |
| 1982 | 10.8 | - | - | 5.5 | 10.2 |
| 1983 | 14.0 | - | - | 25.0 | 14.7 |
| 1984 | 16.6 | - | - | 25.6 | 17.4 |
| 1985 | 1.5 | - | - | -15.2 | 0.8 |
| 1986 | 8.0 | - | - | -2.9 | 5.5 |
| 1987 | 7.7 | - | - | 13.4 | 6.8 |
| 1988 | 14.0 | - | - | 17.8 | 11.5 |
| 1989 | 11.6 | - | - | 9.0 | 9.7 |
| 1990 | 21.5 | 24.6 | - | 22.2 | 20.0 |
| 1991 | 12.2 | 11.5 | - | 9.2 | 11.2 |
| 1992 | 11.4 | 9.4 | - | 8.8 | 10.0 |
| 1993 | 11.7 | 8.4 | - | 7.6 | 9.5 |
| 1994 | 8.4 | 4.8 | - | 5.0 | 9.4 |
| 1995 | 7.7 | 3.9 | - | 8.8 | 8.4 |
| 1996 | 15.9 | 14.7 | - | 20.5 | 12.2 |
| 1997 | 9.6 | 7.1 | 7.4 | 6.9 | 8.7 |
| 1998 | 9.4 | 6.9 | 7.3 | 6.1 | 8.4 |
| 1999 | 4.7 | 3.8 | 3.6 | -0.3 | 4.4 |
| 2000 | 6.2 | 3.2 | 3.6 | 1.7 (அ) | 6.7 |

(அ) தற்காலிகமானவை.  மூலங்கள்: குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம். இலங்கை மத்திய வங்கி.

அதிகரிப்புக்களைவிட உயர்வானதாகும். 2000ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச்சராசரி பணவீக்கவீதம் 3.6 சதவீதமாகக் காணப்பட்டதுடன் இது 1999இன் அதே வீதமாகும். பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் பிரதிபலிக்கப்பட்ட பணவீக்க வீதம் 1999இன் நேரிணையான வீதமான 3.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 3.2 சதவீதத்தில் ஓரளவு தாழ்ந்து காணப்பட்டது. எனினும் அனைத்து மூன்று முக்கிய சுட்டெண்களும் எரிபொருள் வெளிச்சத் துணைத்துறையில் உயர்ந்த அதிகரிப்புக்களைப்பதிவு செய்தன. 2000ஆம் ஆண்டுக்கான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் இந்த வகையின் ஆண்டுச் சராசரி 1999இன் 2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 19 சதவீதமாகவும் கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் இந்தவகையின் ஆண்டுச் சராசரி 1999இன் 2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 19 சதவீதமாகவும் கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் 1999இன் 0.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் நேரிணையான அதிகரிப்பு 16 சதவீதமாகவும் பாரிய கொழும்பு விலைச் சுட்டெண்ணில் 1999இன் 1.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 15 சதவீதமாகவும் காணப்பட்டது. அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் உள்ளடக்கி விலை மாற்றங்களின் அனைத்து மாற்று அளவீடுகளையும்விட கூடுதலான உள்ளடக்கத்தைக் கொண்ட மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கி 1999இன் 4.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 6.7 சதவீத பணவீக்க வீதத்தைப் பதிவு செய்தது.

முதனிலைச் சந்தை மட்டங்களில் விலை அசைவுகளை அளவிடும் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்அதனது அசையும் சராசரியில் 1999இன் 0.3 சதவீத வீழ்ச்சிக்கு எதிராக 2000ஆம் ஆண்டில் 1.7 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்ததுடன் முக்கியமாக இறக்குமதி செய்யப்பட்ட இடைநிலைப் பொருட்களின் விலை அசைவுகளைக் பிரதிபலித்தது.

## நிருவகிக்கப்பட்ட விலைகளில் திருத்தம்

அரசாங்கக் கொள்கையின் செல்வாக்குக்கு உட்பட்டு நேரடியாக அல்லது மறைமுகமாக தீர்மானிக்கப்படும் விலைகள் பலவற்றின் பல சுற்றுக்களிலான மேல் நோக்கிய திருத்தத்தை 2000ஆம் ஆண்டு அனுபவித்தது. எனவே சரியாக இல்லாவிட்டாலும் கூட அவை நிருவகிக்கப்பட்ட விலைகள் எனக் குறிப்பிடப்படுகின்றன. அதிகரித்துச் செல்லும் உலக விலைகளுக்கும் ரூபாவின் உயர்வான பெறுமதித் தேய்விற்கும் ஏற்ப உள்நாட்டுப் பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்படும் சீராக்கத்தினை இவ்வதிகரிப்புக்கள் பிரதிபலித்தன. மறுபுறத்தில் இவ்வதிகரிப்புக்கள் திறந்த சந்தையில் பொருட்களுக்கும் பணிகளுக்குமான தொடர்ச்சியான விலை அதிகரிப்புக்களுக்கு இட்டுச் சென்றன. அத்தகைய பண்டங்களாக டீசல், உலையெண்ணெய், மண்ணெண்ணெய், திரவப் பெற்றோலியவாயு, மின்சாரம் பேருந்துக் கட்டணங்கள், கோதுமைமா, பாண் சிகரட்டுக்கள், மற்றும் சாராயம் என்பன விளங்கின. இவ்வாண்டில் டீசல் விலைகள் நான்கு முறை திருத்தப்பட்டு 86 சதவீத மொத்த அதிகரிப்பை விளைவித்தது. மூன்று சுற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட அதிகரிப்புக்களின் பின்னர் மண்ணெண்ணெய் விலை 77 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. உலை எண்ணெய்யின் அனைத்து வகைகளும் மூன்று சுற்றுக்களின் பின்னர் 100 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. யூலையில் கோதுமைமாவினதும் பாணினதும் விலைகள் முறையே 17 சதவீதத்தினாலும், 6 சதவீதத்தினாலும் குறைக்கப்பட்டன எனினும் கோதுமைத் தானியத்தின் அதிகரித்துச் செல்லும் உலக விலைகளின் காரணமாக நவெம்பரில் அவை ஒவ்வொன்றும் 13 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன. திரவப் பெற்றோலிய வாயுவின் விலை மூன்று சுற்றுக்களில் 52 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன. கைத்தொழில் வாயுவின் விலை ஒரேயொருமுறை 15 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது. உலை எண்ணெய்யினதும் டீசலினதும் விலை அதிகரிப்புக்களின் காரணமாக மின்சாரக் கட்டணங்களும் பேருந்துக் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டன. மின்சாரக் கட்டணங்களினதும் பேருந்துக் கட்டணங்களினதும் சராசரி அதிகரிப்பு முறையே 6 சதவீதமாகவும் 15 சதவீதமாகவும்

அட்டவணை 6.3
1999 மற்றும் 2000ஆம் ஆண்டுகளில் நிருவகிக்கப்பட்ட விலைகளின் திருத்தங்கள்

| விடயம் | அலகு | விலை மாற்றத் திற்கு முன்பான விலை | விலை மாற்றத் திற்குப் பின்னான விலை | முழுமையான மாற்றம் | சதவீத மாற்றம் | திருத்தியமைக்கப் பட்ட திகதி |
|---|---|---|---|---|---|---|
| **1999ஆம் ஆண்டின் விலைத் திருத்தங்கள்** | | | | | | |
| பாண் | 450 கிறாம் (ஒன்று) | 8.25 | 8.00 | -0.25 | -3.03 | 1999/10/18 |
| சிகரட்டுக்கள் (கோல்ட்லீப்) | ஒன்று | 5.50 | 6.00 | 0.50 | 9.09 | 1999/11/10 |
| திரவப் பெற்றோலிய வாயு | 13.0 கி.கிறாம் | 310.00 | 320.00 | 10.00 | 3.23 | 1999/06/15 |
| திரவப் பெற்றோலிய வாயு | 13.0 கி.கிறாம் | 320.00 | 335.00 | 15.00 | 4.69 | 1999/12/30 |
| கோதுமை மா | 1 கி.கி. | 18.95 | 17.95 | -1.00 | -5.28 | 1999/10/18 |
| **2000ஆம் ஆண்டின் விலைத் திருத்தங்கள்** | | | | | | |
| பாண் | 450 கிறாம் (ஒன்று) | 8.00 | 7.50 | -0.50 | -6.25 | 2000/07/01 |
| பாண | 450 கிறாம் (ஒன்று) | 7.50 | 8.50 | 1.00 | 13.33 | 2000/11/28 |
| பேருந்துக் கட்டணம் | பிரிவு ஒன்று | 2.00 | 3.00 | 1.00 | 50.00 | 2000/06/17 |
| சிகரட்டுக்கள் (கோல்ட் லீப்) | சிகரட் ஒன்று | 6.00 | 6.50 | 0.50 | 8.33 | 2000/05/11 |
| சிகரட்டுக்கள் (கோல்ட் லீப்) | சிகரட் ஒன்று | 6.50 | 7.00 | 0.50 | 7.69 | 2000/11/17 |
| தென்னஞ் சாராயம் | 750 மில்லி | 250.00 | 260.00 | 10.00 | 4.00 | 2000/05/11 |
| தென்னஞ் சாராயம் | 750 மில்லி | 260.00 | 270.00 | 10.00 | 3.85 | 2000/10/19 |
| டீசல் | ஒரு லீற்றர் | 13.20 | 16.20 | 3.00 | 22.73 | 2000/02/07 |
| டீசல் | ஒரு லீற்றர் | 16.20 | 19.50 | 3.30 | 20.37 | 2000/12/06 |
| டீசல் | ஒரு லீற்றர் | 19.50 | 21.50 | 2.00 | 10.26 | 2000/11/16 |
| டீசல் | ஒரு லீற்றர் | 21.50 | 24.50 | 3.00 | 13.95 | 2000/12/28 |
| மின்வலு (வீடு) | (0-30 அலகு) | 2.20 | 2.40 | 0.20 | 9.09 | 2000/06/01 |
| உலை எண்ணெய் 500செக்கன்கள் | ஒரு லீற்றர் | 7.80 | 10.80 | 3.00 | 38.46 | 2000/06/12 |
| உலை எண்ணெய் 500செக்கன்கள் | ஒரு லீற்றர் | 10.80 | 14.40 | 3.60 | 33.33 | 2000/12/27 |
| உலை எண்ணெய் 500செக்கன்கள் | ஒரு லீற்றர் | 14.40 | 15.90 | 1.50 | 10.42 | 2000/11/17 |
| மண்ணெண்ணெய் | ஒரு லீற்றர் | 10.40 | 15.40 | 5.00 | 48.08 | 2000/02/07 |
| மண்ணெண்ணெய் | ஒரு லீற்றர் | 15.40 | 17.40 | 2.00 | 12.99 | 2000/11/16 |
| மண்ணெண்ணெய் | ஒரு லீற்றர் | 17.40 | 18.40 | 1.00 | 5.75 | 2000/12/28 |
| திரவப் பெற்றோலிய வாயு (வீடு) | 12.5 கி.கிறாம் (அ) | 335.00 | 365.00 | 30.00 | 8.96 | 2000/02/07 |
| திரவப் பெற்றோலிய வாயு (வீடு) | 12.5 கி.கிறாம் | 365.00 | 470.00 | 105.00 | 28.77 | 2000/06/01 |
| திரவப் பெற்றோலிய வாயு (வீடு) | 12.5 கி.கிறாம் | 470.00 | 509.00 | 39.00 | 8.30 | 2000/12/28 |
| திரவப் பெற்றோலிய வாயு (பெரியது) | 37.5 கி.கிறாம் | 1,603.13 | 1,850.87 | 247.74 | 15.45 | 2000/11/15 |
| கோதுமை மா | 1 கி.கி. | 17.95 | 14.95 | -3.00 | -16.71 | 2000/07/01 |
| கோதுமை மா | 1 கி.கி. | 14.95 | 16.95 | 2.00 | 13.38 | 2000/11/28 |

(அ) குறைந்தது அடைப்புக்குறிக்குள்
(ஆ) 27.01.2000ஆம் ஆண்டு தொடக்கம் திரவப் பெற்றோலிய வாயு உருளை ஒன்றின் நிறை (வீடு) 0.5 கி.கிறாம்களால் குறைக்கப்பட்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

காணப்பட்டது. சாராயம் மற்றும் சிகரட்டுக்கள் என்பனவற்றின் விலை அதிகரிப்புக்கள் முறையே 8 சதவீதமாகவும் 17 சதவீதமாகவும் காணப்பட்டன.

1999இன் நேரிணையான வீதமான 4.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் நிருவகிக்கப்பட்ட விலைகள் தவிர்ந்த விடயங்களின் பணவீக்கம் 5.7 சதவீதமாகக் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டின் மொத்தப் பணவீக்கமான 6.2 சதவீதத்திற்கு நிருவகிக்கப்பட்ட விலைகளின் அதிகரிப்புக்கள் 1.6 சதவீத புள்ளிகளுக்குப் பங்களிப்புச் செய்த வேளையில் 1999இன் 4.7 சதவீத பணவீக்கத்துக்கான பங்களிப்பு 0.7 சதவீதமாக மட்டுமே இருந்தது. இதன்படி, ஆரம்ப கட்டங்களில் செலவு அதிகரிப்புக்களுக்கு அரசாங்க நிறுவனங்களின் மெதுவான எதிர்ச்செயலாற்றலை இது பிரதிபலிப்பதாக இருந்தது.

## கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

2000ஆம் ஆண்டில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 6.2 சதவீத ஆண்டுச் சராசரி அதிகரிப்பைப் பதிவு செய்ததுடன் இது 1999இல் பதிவு செய்யப்பட்ட 4.7 சதவீதத்தினைவிட ஓரளவு உயர்வானதாகும். 1999உடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் அதனது புள்ளிக்குப்புள்ளி மாற்றத்தில் பொதுவான சுட்டெண் கணிசமானளவு மாறுபட்ட தன்மையொன்றைக் காட்டியது. புள்ளிக்குப் புள்ளி மாற்றமானது குறிப்பிட்ட மாதமொன்றில் முன்னைய ஆண்டின் அதே மாதத்துடன் ஒப்பிடுகையில் சுட்டெண்ணின் புள்ளிக்குப்புள்ளி மாற்றத்தினை அளவிடுகின்றது. 2000ஆம் ஆண்டில் அதன் அதிகரிப்பானது 1999இனைவிட சார்பு ரீதியில் குறிப்பாக ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் உயர்வானதாகக் காணப்பட்டது. 1999இல் அதிஉயர் புள்ளிக்குப்புள்ளி


**அட்டவணை 6.4**
கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்
(952=100)

| விடயம் | நிறைகள் | சராசரிச் சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் | | அதிகரிப் பிற்கான பங்களிப்பு (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1999 | 2000 | 1999 | 2000 | 1999 | 2000 | 1999 | 2000 |
| எல்லா விடயங்களும் | 100.0 | 2,392.1 | 2,539.8 | 4.7 | 6.2 | 4.0 | 10.8 | 100.00 | 100.0 |
| பண்ட வகைகளின்படி | | | | | | | | | |
| உணவு | 61.9 | 2,695.4 | 2,815.8 | 4.0 | 4.5 | 3.5 | 9.7 | 61.9 | 52.4 |
| ஆடைகள் | 9.4 | 863.3 | 872.9 | 1.3 | 1.1 | 0.6 | 2.7 | 1.0 | 0.6 |
| எரிபொருளும் வெளிச்சமும் | 4.3 | 3,929.7 | 4,660.9 | 1.5 | 18.6 | 1.6 | 27.4 | 2.3 | 21.2 |
| வாடகை | 5.7 | 109.8 | 109.8 | - | - | - | - | - | - |
| பல்வகை | 18.7 | 2,558.1 | 2,802.4 | 10.3 | 9.6 | 7.8 | 10.8 | 34.8 | 26.0 |

*மூலம்: குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.*

*மாற்றமான 7.7 சதவீதம் ஏப்பிறலில் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டில் அதி உயர் புள்ளிக்குப்புள்ளி மாற்றம் திசெம்பரில் காணப்பட்டதுடன் இது 10.8 சதவீதமாகவும் இரண்டாவது உயர் மாற்றமான 10.1 சதவீதம் யூலையிலும் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டின் இந்த கூடிய அதிகரிப்புக்கள் அந்த மாதத்திலும் அதற்கு முந்திய மாதத்திலும் நிருவகிக்கப்பட்ட விலைகளில் மேற் கொள்ளப்பட்ட திருத்தங்களுடன் தொடர்புடையவை யாகும். பொதுவான நுகர்வோர் கூடையில் 62 சதவிதமான அதிஉயர் நிறையினைக் கொண்டிருக்கும் உணவுத் துணைச்சுட்டெண் 2000ஆம் ஆண்டில் 5 சதவீத ஆண்டுச்சராசரி அதிகரிப்பைப் பதிவு செய்தது. சில உணவு விடயங்களின் விலைகள் கடுமையாக அதிகரித்தபோதும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உணவு விடயங்களின் சராசரி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் அவை ஓரளவு எதிரீடு செய்யப்பட்டன. 1999இன் 2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் எரிபொருள் வெளிச்சம் துணைத்துறை கணிசமான 21 சதவீத பங்களிப்பை வழங்கியமையின் காரணமாக பொதுவான விலை அதிகரிப்பில் உணவு வகையின் பங்களிப்பு 1999இனைவிட குறைவானதாக இருந்தது. முன்னைய ஆண்டின் 2 சதவீதத்துடன்*

**வரைபடம் 6.1**
**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்**
(1952 = 100)




*ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் எரிபொருள் வெளிச்சம் துணைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு அதிஉயர் 19 சதவீதத்தில் காணப்பட்டது. பொதுவான கூடையில் எரிபொருள் வெளிச்சத்தின் நிறை 4 சதவீதமாக மட்டுமே காணப்படுவதை கருத்திற் கொள்ளும்போது மொத்த விலை மாற்றத்தில் அதனது 21 சதவீதப் பங்களிப்பானது இவ்வாண்டில் இவ்வகையின் கணிசமான விலை அதிகரிப்புக்களை குறித்துக்காட்டுகின்றது. போக்குவரத்து, சிகரட்டுக்களும் வெறியக் குடிவகையும், போன்ற விடயங்களை உள்ளடக்கும் பல்வகை துணைச்சுட்டெண் இக்காலப்பகுதியில் விலைத் திருத்தங்களுக்கு உட்பட்டு மொத்த விலை அதிகரிப்பில் 26 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. 9 சதவீத நிறையைக் கொண்டுள்ள புடவைகள் துணைச் சுட்டெண்ணின் பங்களிப்பு சிறிதளவான 1 சதவீதமாகும். பெருமளவு தாராளமயமாக்கப்பட்ட சூழலொன்றில் புடவைகள் வர்த்தகத்தில் காணப்படும் கடுமையான போட்டியானது கடந்த காலங்களிலும் புடவைகளின் விலை அதிகரிப்பை ஆகக்குறைந்த மட்டமொன்றில் வைத்திருந்தது.*

## பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

*கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைவிட பரந்தளவிலான புவியியற் பிரதேசத்தை உள்ளடக்கும் பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 2000ஆம் ஆண்டில் 3.2 சதவீத ஆண்டுச் சராசரி பணவீக்கத்தைப் பதிவு செய்தது. 1999இன் 4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இது குறைவானதாகும். உணவு குடிபானம் வகையின் விலைகள் 1999இன் 3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1 சதவீத தாழ்ந்த வீதத்தில் அதிகரித்தன. 2000ஆம் ஆண்டில் மொத்தச் சுட்டெண் மெதுவடைந்தமைக்கு இந்தச் சுட்டெண் கணிசமான பங்களிப்பை வழங்கியது.*

*வெறியக் குடிவகை, புகையிலை, வெற்றிலையும் பாக்கும் துணைத்துறையின் விலைகள் முன்னைய ஆண்டின் 18 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில்*


**அட்டவணை 6.5**
கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்
(சனவரி - யூன் 1989=100)

| விடயம் | நிறைகள் | சராசரிச் சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1999 | 2000 | 1999 | 2000 | திசெ. 1999 | திசெ. 2000 |
| எல்லா விடயங்களும் | 100.0 | 244.1 | 252.0 | 3.8 | 3.2 | 0.4 | 7.3 |
| பண்டவகைப்படி | | | | | | | |
| உணவு குடிபானம் | 69.3 | 257.1 | 260.8 | 2.8 | 1.4 | -1.1 | 6.2 |
| மதுபானம், புகையிலை, வெற்றிலை, பாக்கு | 3.8 | 350.4 | 396.1 | 18.4 | 13.0 | 11.3 | 13.5 |
| வீடமைப்பு | 8.9 | 110.1 | 110.2 | 0.1 | 0.1 | 0.1 | 0.2 |
| எரிபொருளும் வெளிச்சமும் | 5.4 | 244.7 | 280.4 | 1.3 | 14.6 | 1.5 | 21.4 |
| புடவையும் காலணியும் | 2.8 | 245.9 | 250.8 | 6.3 | 2.0 | 1.1 | 4.0 |
| தனியார் பாதுகாப்பும் சுகாதாரமும் வீட்டுப் பாவனைப் பொருட்களும், பணிகளும் | 4.9 | 258.2 | 266.7 | 6.4 | 3.3 | 4.0 | 3.7 |
| போக்குவரத்து | 2.8 | 204.4 | 246.1 | 4.3 | 20.4 | 11.1 | 22.8 |
| பல்வகை | 2.1 | 203.0 | 200.6 | 10.6 | -1.2 | 2.0 | -1.6 |

மூலம்: குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.

2000ஆம் ஆண்டில் தாழ்ந்த 13 சதவீதத்தில் அதிகரித்தன. புடவைகள், காலணி மற்றும் தனியாள் கவனிப்பு துணைத்துறைகள் இவ்வாண்டில் மெதுவடைந்தன. எனினும் எரிபொருளும் வெளிச்சமும் மற்றும் போக்குவரத்தும் தொடர்பூட்டலும் துணைத்துறைகள் முறையே 15 சதவீத 20 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்த வேளையில் வீடமைப்புத் துணைத்துறையின் விலைகள் மாற்றமின்றிக் காணப்பட்டன.


**வரைபடம் 6.2**
**கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்**
(சனவரி - யூன் 1986 = 100)




## கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்

2000ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண் 3.6 சதவீத ஆண்டுச்சராசரி அதிகரிப்பைப் பதிவு செய்ததுடன் இது 1999இன் அதே வீதமாகும். இவ்வாண்டில் பொதுவான சுட்டெண்ணில் 59 சதவீத அதிஉயர் நிறையிணைக் கொண்ட உணவுத் துணைச் சுட்டெண்ணில் பதிவு செய்யப்பட்ட தாழ்ந்த விலை அதிகரிப்புக்களே இதற்கான முக்கிய காரணம் எனக் குறிப்பிடப்படுகின்றது. உணவுத் துணைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு 2 சதவீதமாகக் காணப்பட்டதோடு முன்னைய ஆண்டைவிட சிறிதளவு தாழ்ந்ததாகும். 1999இன் 40 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் பொதுவான சுட்டெண்ணின் அதிகரிப்புக்கு உணவு வகையின் பங்களிப்பு 28 சதவீதமாகும். 2000ஆம் ஆண்டில் விலை அதிகரிப்புக்கள் மெதுவடைந்த ஏனைய துணைச் சுட்டெண்களாக வீடமைப்பு (4சதவீதத்திலிருந்து 3 சதவீதத்திற்கு) வெறியக் குடிவகை, புகையிலை, வெற்றிலை பாக்கு (22 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு) என்பன விளங்கின. சவர்க்காரம் மற்றும் தேங்காய் எண்ணெய் என்பனவற்றின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முதன்மைக் காரணத்தினால் பல்வகை வகைகளின் விலைகள் 1999இன் 7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. மேலே குறிப்பிடப்பட்ட மெதுவடைதலுக்கு மாறாக எரிபொருள் வெளிச்சம் மற்றும் போக்குவரத்து துணைச் சுட்டெண்கள் விரைந்த விலை அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. ஏறத்தாழ 5 சதவீத பங்கைக் கொண்டிருந்த

**வரைபடம் 6.3**
**கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்**
(ஒத்.1996 - செத்.97 = 100)



அட்டவணை 6.6
கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்
(ஒத்தோபர் 1996 - செத்தெம்பர் 1997=100)

| விடயம் | நிறைகள் | சராசரிச் சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் | | அதிகரிப் பிற்கான உதவு தொகை (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1999 | 2000 | 1999 | 2000 | திசெ. 1999 | 2000 | 1999 | 2000 |
| எல்லா விடயங்களும் | 100.0 | 113.4 | 117.5 | 3.6 | 3.6 | -0.1 | 8.5 | 100.0 | 100.0 |
| பண்டவகைப்படி | | | | | | | | | |
| உணவு குடிபானம் | 58.7 | 113.8 | 115.7 | 2.4 | 1.7 | -3.1 | 8.6 | 39.7 | 27.8 |
| வீடமைப்பு | 13.2 | 109.5 | 112.4 | 4.3 | 2.6 | 3.8 | 2.3 | 0.9 | 9.3 |
| எரிபொருளும் வெளிச்சமும் | 4.9 | 119.4 | 138.3 | 0.6 | 15.8 | 0.3 | 23.8 | 15.2 | 23.0 |
| புடவையும் காலணியும் | 6.2 | 106.2 | 108.0 | 1.9 | 1.6 | 2.3 | 3.4 | 3.2 | 2.6 |
| குடிபானம், புகையிலை, வெற்றிலை, பாக்கு | 4.4 | 135.4 | 152.3 | 22.0 | 12.4 | 14.0 | 15.3 | 27.4 | 18.5 |
| நலக்கவனிப்பும் சுகாதாரமும் | 3.8 | 113.5 | 118.2 | 4.1 | 4.1 | -0.4 | 10.3 | 4.3 | 4.4 |
| கல்வியும் பொழுதுபோக்கும் | 2.8 | 104.2 | 106.5 | 1.9 | 2.2 | - | 5.2 | 1.4 | 1.5 |
| போக்குவரத்து | 3.7 | 103.9 | 118.8 | 3.6 | 14.3 | 10.8 | 13.3 | 3.4 | 13.5 |
| பல்வகை | 2.3 | 119.3 | 118.2 | 7.1 | -0.9 | 1.2 | -0.6 | 4.5 | -0.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.


எரிபொருள் மற்றும் வெளிச்ச துணைச்சுட்டெண் 1999இன் 1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 16 சதவீதத்தினால் அதிகரித்தது. 1999இன் 4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் போக்குவரத்து துணைச்சுட்டெண் 14 சதவீதத்தினால் கடுமையாக அதிகரித்தது.

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

தொடக்க சந்தையில் விலைகளின் அசைவுகளை மொத்த விற்பனை விலைச் சுட்டெண் அளவிடுகின்றது. 1999இன் 0.3 சதவீத சிறிதளவான வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 1.7 சதவீத ஆண்டுச் சராசரி அதிகரிப்பைப் பதிவு செய்தது.

மசகெண்ணெய், வளமாக்கி, கோதுமைத் தானியம், உருக்கு, மருந்தாக்கற் பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதிகளின் விலை அதிகரிப்புக்களே சுட்டெண்ணின் பொதுவான அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த முதன்மைக் காரணிகளாகும்.

வரைபடம் 6.4
மொத்த விற்பனை விலைச் சுட்டெண்
(1974 = 100)




பொதுவான சுட்டெண்ணின் பெரும்பாலான துணைச் சுட்டெண்கள் இவ்வாண்டில் விலை அதிகரிப்புக்களைப் பதிவு செய்த வேளையில் சில துணைச் சுட்டெண்கள் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தன. கணிசமான அதிகரிப்புக்களைக் கொண்ட சுட்டெண்களாக பெற்றோலியம் 22 சதவீதம், தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் 12 சதவிதம், பல்வகை வகை 8 சதவீதம், வெறியக் குடிவகை 6 சதவீதம் எரிபொருள் வெளிச்சம் 6 சதவீதம் என்பன விளங்கின. போக்குவரத்து, இரசாயனங்கள் மற்றும் உலோகங்கள் துணைச் சுட்டெண்கள் முறையே 4 சதவீத 3 சதவீத 2 சதவீத தாழ்ந்த அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. இதே வேளையில் உணவு, பொறிகருவிகள், மற்றும் புடவைகள் மற்றும் காலணி என்பனவற்றுக்கான துணைச்சுட்டெண்கள் முறையே 2 சதவீத 1.7 சதவீத மற்றும் 0.3 சதவீத வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன.

துறைவாரியான பகுப்பாய்வின்படி உள்நாட்டுத் தொகுதியின் விலைகள் முன்னைய ஆண்டின் அதே வீதத்திலேயே அதிகரித்தன. முன்னைய ஆண்டின் 0.1 சதவீத சிறிதளவு வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதித் தொகுதியின் விலைகள் கணிசமான 12 சதவீதத்தினால் அதிகரித்தன. இதற்கு மாறாக 2000ஆம் ஆண்டில் ஏற்றுமதி வகை 5 சதவீத வீழ்ச்சியினைப் பதிவு செய்து 1999இல் முக்கியமாக தேயிலை விலைகளில் ஏற்பட்ட 4 சதவீத வீழ்ச்சியினைத் தொடர்ந்து தெங்கு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினை முக்கியமாகப் பிரதிபலித்தது.

இறுதிப்பயன்பாட்டுப் பகுப்பாய்வில் 2000ஆம் ஆண்டில் முதலீட்டுப் பொருட்களின் விலைகள் சிறிதளவான 0.6 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தன. இடைநிலைப் பொருட்கள் 12 சதவீத அதிகரிப்பைப்

**அட்டவணை 6.7**
மொத்த விற்பனை விலைச் சுட்டெண்
(1974=100)

| விடயம் | நிறைகள் | சராசரிச் சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1999 | 2000 | 1999 | 2000 | திசெ. 1999 | திசெ. 2000 |
| எல்லா விடயங்களும் | 100.0 | 1295.3 | 1317.2 | -0.3 | 1.7 | -0.5 | 4.8 |
| பண்ட வகைப்படி | | | | | | | |
| உணவு | 67.8 | 1212.4 | 1187.1 | -0.9 | -2.1 | -1.7 | 1.9 |
| வெறிக்குடிவகை | 2.9 | 1649.3 | 1750.1 | 18.0 | 6.1 | 0.2 | 9.7 |
| புடவை, காலணிகள் | 4.0 | 634.9 | 632.9 | 0.1 | -0.3 | - | -0.1 |
| தாள் உற்பத்திகள் | 1.4 | 934.3 | 1050.0 | 2.1 | 12.4 | 1.8 | 18.8 |
| இரசாயன, இரசாயன உற்பத்திகள் | 5.2 | 807.9 | 828.2 | 4.7 | 2.5 | 1.9 | 3.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 6.4 | 1528.2 | 1859.6 | - | 21.7 | - | 35.5 |
| உலோகமல்லா உற்பத்திகள் | 1.8 | 2745.1 | 2762.4 | 3.4 | 0.6 | -3.3 | -4.4 |
| உலோக உறபத்திகள் | 0.9 | 749.1 | 763.3 | -8.2 | 1.9 | -9.0 | 4.8 |
| போக்குவரத்துக் கருவிகள் | 0.8 | 886.2 | 916.8 | -5.1 | 3.5 | -0.9 | 7.3 |
| மின் கருவிகளும் வழங்கல்களும் | 1.0 | 842.5 | 848.6 | 0.5 | 0.7 | -2.3 | 10.4 |
| பொறிகள் | 1.3 | 691.4 | 679.5 | 6.2 | -1.7 | 0.2 | 3.4 |
| எரிபொருளும் வெளிச்சமும் | 1.8 | 2693.9 | 2853.4 | -4.6 | 5.9 | 6.2 | 0.9 |
| பல்வகை | 4.8 | 2500.7 | 2687.3 | -3.4 | 7.5 | 5.2 | 2.6 |
| துறைவகைப்படி எண் I | | | | | | | |
| உள்நாட்டு வகை | 50.3 | 1143.7 | 1175.9 | 2.9 | 2.8 | -0.2 | 9.7 |
| இறக்குமதி வகை | 27.2 | 933.1 | 1044.7 | -0.1 | 12.0 | -1.5 | 20.3 |
| ஏற்றுமதி வகை | 22.5 | 2071.4 | 1961.3 | -4.0 | -5.3 | -0.3 | -9.4 |
| துறைவகைப்படி எண் II | | | | | | | |
| நுகர்வுப் பொருட்கள் | 75.3 | 1279.6 | 1265.9 | -0.1 | -1.1 | -1.1 | 2.5 |
| இடைநிலைப் பொருட்கள் | 20.5 | 1309.4 | 1464.5 | -1.5 | 11.8 | 2.4 | 14.5 |
| முதலீட்டுப் பொருட்கள் | 4.2 | 1509.0 | 1516.7 | 2.4 | 0.5 | -3.6 | -2.5 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பதிவு செய்தவேளையில் உணவுத் துணைச் சுட்டெண்ணின் வீழ்ச்சிக்கு இசைந்து செல்லும் வகையில் நுகர்வுப் பொருட்களின் விலைகள் 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

### மாவட்ட ரீதியான பணவீக்க வீதங்கள்


அநுராதபுரம், மாத்தளை மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கான மூன்று பிராந்திய சுட்டெண்களைப் பயன்படுத்தி நுகர்வோர் விலைகளின் பிராந்திய மாற்றங்களை அளவிடுவதற்கு 1999இலிருந்து மத்திய வங்கி முயற்சி செய்து வந்துள்ளது. இந்தச் சுட்டெண்கள் இன்னமும் தேர்வாய்வுக் கட்டத்தில் காணப்படுவதோடு அவற்றின் அசைவுகளை முன்னெச்சரிக்கையுடன் கணிப்பிட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இவ்வனைத்துச் சுட்டெண்களும் கொழும்பினை மையமாகக் கொண்ட சுட்டெண்களைவிட தாழ்ந்த ஆண்டுப் பணவீக்க வீதங்களைப் பதிவு செய்தன. தகவல் மற்றும் விநியோக வழிகளில் மேம்பாடு காணப்பட்டமையைத் தொடர்ந்து இடைத்தரகர்களின் இடையீடு இன்றியும் ஆகக்குறைந்த போக்குவரத்து மற்றும் கையாளல் செலவுகளுடனும் குறிப்பாக மரக்கறி உற்பத்திப் பொருட்களின் வழங்கல்களை நேரடியாகவே சில்லறை விற்பனையாளர்கள் பெற்றுக் கொள்ளும் போக்கு ஒன்று உருவாகியுள்ளது. இது சில வகையான மரக்கறி விடயங்களுக்கு கொழும்பினைவிட உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களுக்கு அருகாமையில் உள்ள சந்தைகளில் தாழ்ந்த விலைகளுக்குக் காரணமாகியுள்ளது. கொழும்பை அடிப்படையாகக் கொண்ட சுட்டெண்களைவிட பிராந்திய விலைச் சுட்டெண்களில் உணவு விடயங்களுக்குக் கூடுதலான நிறை காணப்படுகின்றமையினால் பிராந்திய விலைச் சுட்டெண்கள் தாழ்ந்த பணவீக்கத்திைப் பதிவு செய்வதற்கான காரணமாக அமையலாம். எனினும் முடிவான தீர்மானங்களை மேற் கொள்ளுவதற்கு விலைச் சேகரிப்பு தொடர்பாக இந்தச் சுட்டெண்களில் மேலதிக மேம்பாடு தேவைப்படுகின்றது.

**அட்டவணை 6.8**
மாவட்ட அடிப்படையிலான நுகர்வோர் விலைச்சுட்டெண்
(1996 ஒத் – 1997 செத் =100)

| மாவட்டம் | சுட்டெண்கள் | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 1998 | 1999 | 2000 | 1999 | 2000 |
| கொழும்பு | 109.5 | 113.4 | 117.5 | 3.6 | 3.6 |
| மாத்தளை | 107.5 | 112.2 | 113.0 | 4.4 | 0.7 |
| அநுராதபுரம் | 108.9 | 114.8 | 115.4 | 5.4 | 0.5 |
| மாத்தறை | 109.1 | 114.4 | 114.6 | 4.9 | 0.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வரைபடம் 6.5
தெரிந்தெடுக்கப்பட்ட பண்டங்களின் மாதாந்த விலைகள்




## பிரதேச விலை வேறுபாடுகள்

மாறுபட்ட பிரதேச மையங்களுக்கிடையே விலை வேறுபாடுகள் கடந்தகால பொதுவான முறையினையே தொடர்ந்தும் கொண்டிருந்தன. தகவல் மற்றும் போக்குவரத்து வசதிகளின் அபிவிருத்திகளுடன் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான விநியோக வழிகள் மேம்பட்டமையின் காரணமாக விலை வேறுபாடு ஓரளவுக்குக் குறைக்கப்பட்டது. எனினும் பிரதேச சந்தைகள் தொடர்ந்தும் விலை வேறுபாடுகளைக் காட்டியதோடு உற்பத்திப் பிரதேசங்களுக்கும் உற்பத்தியல்லாப் பிரதேசங்களுக்குமிடையில் உற்பத்திப் பொருட்களின் வழங்கலிலும் தரத்திலும் காணப்பட்ட வேறுபாடுகளைப் பிரதிபலிப்பதாக இருந்தது. இந்த வேறுபாடுகளை மேலும் குறைப்பதற்காக பொதியிடல், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகளில் மேலதிக மேம்பாடுகளின் தேவைப்பாட்டினை இது குறித்துக்காட்டுகின்றது. தம்புள்ள பொருளாதார மையத்தினைப் போன்ற உத்தேச பிரதேச வர்த்தக மையங்கள் இந்த விடயத்தினைக் கருததிற் கொள்ளும்.

## 6.2 கூலிகள்

இலங்கையின் பொருளாதாரத்தில் தொழில் நிலையும் அதனைத் தொடர்ந்து சம்பளங்களும் இரண்டு பிரதான வகைகளுக்குள் வருகின்றன. அவையாவன அரசதுறை மற்றும் தனியார்துறை என்பனவாகும். தனியார் துறையானது முறைசார்ந்ததுறை முறைசாராத்துறை என மேலும் பிரிக்கப்பட்டுள்ளது. அரசதுறையானது மத்திய அரசாங்கம், உள்ளூர் ஆட்சி, மாகாண சபைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் என்பனவற்றின் ஊழியர்களை உள்ளடக்கியுள்ளது. ஊழியர் சேமலாப நிதிய நன்மைகளை அனுபவிக்கும் ஊழியர்களை முறைசார்ந்த தனியார்துறை உள்ளடக்கியுள்ள வேளையில் முறைசாராத தனியார் துறையானது தன்விருப்பமானதும் மட்டுப்படுத்தப் பட்டதுமான நன்மைகளை அனுபவிப்போர் தவிர்ந்த எத்தகைய ஒய்வூதிய நன்மையையும் அனுபவிக்காத தனியார்துறையின் ஏனையவற்றை உள்ளடக்குகின்றது.

2000ஆம் ஆண்டில் அரசதுறை ஊழியர்கள் தமது பெயரளவுக் கூலிகளில் அதிகரிப்பு ஒன்றினைப் பெற்றுக் கொண்டனர். எனினும் அதிகரிப்பு வீதமானது

அட்டவணை 6.9
தெரிந்தெடுக்கப்பட்ட உணவு விடயங்களின் சில்லறை விற்பனை விலைகள் (கால முடிவில் தீவு முழுவதும்)

| விடயம் | அலகு | 1999 ரூபா | 2000 ரூபா | 2000 இல் மாற்றம் |
|---|---|---|---|---|
| அரிசி | | | | |
| (சாதாரண புழுங்கல்) | கி.கி. | 26.38 | 23.50 | -10.9 |
| பாண் 450 கிறாம் | ஒன்று | 8.28 | 8.15 | -1.6 |
| முட்டை | ஒன்று | 4.24 | 4.51 | 6.4 |
| தேங்காய் | | | | |
| (நடுத்தர அளவு) | காய் | 10.02 | 7.48 | -25.3 |
| காய்கறி | | | | |
| பாகற்காய் | கி.கி. | 32.85 | 34.92 | 6.3 |
| முட்டைக்கோவா | " | 28.85 | 28.97 | 0.4 |
| கரட் | " | 39.19 | 41.84 | 6.8 |
| போஞ்சி | " | 36.83 | 41.16 | 11.8 |
| லீக்ஸ் | " | 34.37 | 35.56 | 3.5 |
| உருளைக்கிழங்கு | " | 32.46 | 39.82 | 22.7 |
| சின்ன வெங்காயம் | " | 54.25 | 58.66 | 8.1 |
| செத்தல் மிளகாய் (தரம் 1) | " | 132.08 | 121.59 | -7.9 |
| கடல் மீன் | | | | |
| கெலவல்லா | கி.கி. | 147.73 | 173.69 | 17.6 |
| மலட் | " | 124.62 | 138.93 | 11.5 |
| குறுள்ளோ | " | 85.20 | 92.26 | 8.3 |
| சாளை | " | 58.89 | 56.35 | -4.3 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 6.10
தெரிந்தெடுக்கப்பட்ட சந்தைகளில் தெரிந்தெடுக்கப்பட்ட உணவு விடயங்களின் சராசரி சில்லறை விலைகள் 2000(அ)

(ரூ./கி.கி.)

| விடயம் | கொழும்பு | கண்டி | மாத்தறை | அநுராதபுரம் | தம்புள்ள |
|---|---|---|---|---|---|
| சம்பா | 31.09 | 31.05 | 29.48 | 27.84 | 27.15 |
| சிவப்பு பச்சை | 27.87 | 25.25 | 22.33 | 24.01 | 24.41 |
| அவரை | 44.88 | 40.59 | 39.31 | 39.57 | 38.23 |
| கோவா | 30.45 | 25.08 | 25.71 | 28.41 | 27.21 |
| கத்தரிக்காய் | 35.46 | 26.67 | 21.11 | 20.90 | 24.01 |
| பூசணிக்காய் | 24.20 | 25.52 | 20.48 | 18.64 | 17.53 |
| சின்ன வெங்காயம் | 64.73 | 70.50 | 61.73 | 59.48 | 61.47 |
| பெரிய வெங்காயம் | 31.87 | 34.58 | 31.19 | 33.20 | 32.30 |
| உருளைக்கிழங்கு | 30.71 | 32.96 | 30.72 | 32.48 | 31.72 |
| செத்தல் மிளகாய் | 111.78 | 122.86 | 119.25 | 125.78 | 118.04 |
| கெலவல்லா | 186.26 | 211.86 | 195.33 | 211.32 | 145.51 |
| குறுள்ளோ | 76.58 | 114.29 | 81.33 | 101.83 | 90.42 |
| முட்டை (ஒன்றுரூபா) | 3.81 | 4.07 | 4.52 | 4.14 | 4.26 |
| தேங்காய் (ஒன்றுரூபா) | 10.67 | 10.15 | 8.54 | 8.78 | 8.99 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பலதரப்பட்ட ஊழியர் வகைகளுக்கிடையில் வேறுபட்டதோடு 7.4 சதவீதத்திலிருந்து 9.4 சதவீதம் வரையில் காணப்பட்டது. 6.2 சதவீத நுகர்வோர் பணவீக்கம் காணப்படும்போது இத்துறையின் உண்மைக் கூலிகள் 1இலிருந்து 3 சதவீதம் வரையில் அதிகரித்துள்ளதாகக் தெரிய வருகின்றது. முறைசார்ந்த தனியார் துறைகளிலுள்ள பெயரளவு ஆகக் குறைந்த கூலிகளும் 2000ஆம் ஆண்டில் வேறுபட்ட வகைகளுக்கான வேறுபட்ட வீதங்களில் மேல் நோக்கித் திருத்தப்பட்டன. ஆகக் குறைந்த கூலிகளின் அசைவுகளினால் அளவிடப்பட்டவாறு முழுமையான துறைக்கும் 2 சதவீத பொதுவான அதிகரிப்பொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் இது ஆண்டுச் சராசரி பணவீக்கத்தினைவிட தாழ்வானதாகும். வேளாண்மை, கைத்தொழில் மற்றும் வர்த்தக துணைத் துறைகளில் பெயரளவு கூலிகளில் பொதுவான அதிகரிப்பொன்று காணப்பட்டது. எனினும் பணிகள் துறையின் ஆகக்குறைந்த கூலிகள் இவ்வாண்டில் மாற்றமின்றிக் காணப்பட்டன. இதற்கு மாறாக முறைசாராத் தனியார்துறையில் பணவீக்கத்தினைவிட உயர்ந்த வீதத்தில் பெயரளவுக் கூலிகள் அதிகரித்தமையின் காரணமாக உண்மை நியதிகளில் கூலிகள் அதிகரித்தன. நெல் மற்றும் தெங்குப் பயிர்ச் செய்கை, இறப்பர் பால் எடுத்தல், தேயிலை பறித்தல் கட்டுமான வேலைகள் ஆகிய அனைத்திலும் இந்த அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டதோடு இதற்கான தரவுகளும் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.

## அரசதுறை

பள்ளிக்கூட ஆசிரியர்களையும் உள்ளடக்கி மத்திய அரசாங்கத்தின் மூன்று வகையான ஊழியர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட கூலி வீதச் சுட்டெண்களின் அசைவுகளினால் அரசதுறை சம்பள அசைவுகள் கண்காணிக்கப்படுகின்றன. சம்பள மீளாய்வுகள் மேற்கொள்ளப்படும்வரை 2000ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் அரசதுறை ஊழியர்களுக்காக மேலதிகப்படி ஒன்று வழங்கப்பட்டது. இவ்வாண்டில் இது அரசதுறை ஊழியர்களுக்கு (1 சதவீத உண்மைக் கூலி அதிகரிப்பினைப் பெற்றுக்கொண்ட அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் தவிர்ந்த) 1.9 சதவீத உண்மைக் கூலி வீத அதிகரிப்பை ஏற்படுத்தியது. ரூ.12,000 அல்லது அதற்குக் குறைவான சம்பளம் பெறும் அரச அலுவலர்களுக்கு 2000ஆம் ஆண்டு ஒகத்து 01ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் ரூ.600 இடைக்காலப்படி ஒன்று வழங்கப்பட்டது. 2000ஆம் ஆண்டு ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் ஆகக்குறைந்தது ரூ.1000த்துக்கு உட்பட்டு அனைத்து அரச அலுவலர்களுக்கும் 10 சதவீத ஓய்வூதியமற்ற இடைக்காலப்படி ஒன்று வழங்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட ரூ.600 கொடுப்பனவு 10 சதவீத படியினுள் ஒருங்கிணைக்கப்பட்டது.

## முறைசார்ந்த தனியார்துறை

முறைசார்ந்த தனியார்துறைக்கான சம்பள அசைவுகள் கூலிகள் சபைகளின் கீழ்வரும் வர்த்தகங்களிலுள்ள ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண்களினால் கண்காணிக்கப்படுகின்றன. இத்துறையை உள்ளடக்கும் வேளாண்மை, கைத்தொழில் வர்த்தகம் மற்றும் பணிகள் ஆகிய வேறுபட்ட

**அட்டவணை 6.11**
**தெரிந்தெடுக்கப்பட்ட சந்தைகளில் தெரிந்தெடுக்கப்பட்ட உணவு விடயங்களின் சராசரி சில்லறை விலைகள்**
**கொழும்பு மற்றும் தம்புள்ளையிலிருந்தான வேறுபாடு (அ)**

| விடயம் | கொழும்பிலிருந்து வேறுபடும் சதவீதம் | | | | தம்புள்ளையிலிருந்து வேறுபடும் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | கண்டி | மாத்தறை | அநுராதபுரம் | தம்புள்ளை | கண்டி | மாத்தறை | அநுராதபுரம் |
| சம்பா | -0.13 | -5.18 | -10.45 | -12.67 | 14.36 | 8.58 | 2.54 |
| சிவப்பு பச்சை | -9.40 | -19.88 | -13.85 | -12.41 | 3.44 | -8.52 | -1.64 |
| அவரை | -9.56 | -12.41 | -11.83 | -14.82 | 6.17 | 2.83 | 3.51 |
| கோவா | -17.64 | -15.57 | -6.70 | -10.64 | -7.83 | -5.51 | 4.41 |
| கத்தரிக்காய் | -24.79 | -40.47 | -41.06 | -32.29 | 11.08 | -12.08 | -12.95 |
| பூசணிக்காய் | 5.45 | -15.37 | -22.98 | -27.56 | 45.58 | 16.83 | 6.33 |
| சின்ன வெங்காயம் | 8.91 | -4.63 | -8.11 | -5.04 | 14.69 | 0.42 | -3.24 |
| பெரிய வெங்காயம் | 8.50 | -2.13 | 4.17 | 1.35 | 7.06 | -3.44 | 2.79 |
| உருளைக்கிழங்கு | 7.33 | 0.03 | 5.76 | 3.29 | 3.91 | -3.15 | 2.40 |
| செத்தல் மிளகாய் | 9.91 | 6.68 | 12.52 | 5.60 | 4.08 | 1.03 | 6.56 |
| கெலவல்லா | 13.74 | 4.87 | 13.45 | -21.88 | 45.60 | 34.24 | 45.23 |
| குறுள்ளோ | 49.24 | 6.20 | 32.97 | 18.07 | 26.40 | -10.05 | 12.62 |
| முட்டை (ஒன்றுக்கு ரூபா) | 6.82 | 18.64 | 8.66 | 11.81 | -4.46 | 6.10 | -2.82 |
| தேங்காய் (ஒன்றுக்கு ரூபா) | -4.87 | -19.96 | -17.71 | -15.75 | 12.90 | -5.01 | -2.34 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**அட்டவணை 6.12**
**கூலிவீதச் சுட்டெண்கள்**
**(திசெம்பர் 1978=100)**

| விடயம் | பெயரளவு | | உண்மையான | | 2000இன் சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1999 | 2000(அ) | 1999 | 2000(அ) | பெயரளவு (அ) | உண்மையான (அ) |
| 1. அரச ஊழியர்கள் | | | | | | |
| மத்திய அரச ஊழியர்கள் | 1001.4 | 1084.7 | 100.2 | 102.1 | 8.3 | 1.9 |
| நிறைவேற்றுத் தரமல்லா | 959.6 | 1031.3 | 96.0 | 97.1 | 7.5 | 1.1 |
| சிற்றூழியர்கள் | 1029.1 | 1125.8 | 103.0 | 105.9 | 9.4 | 2.8 |
| அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் | 805.5 | 865.1 | 80.6 | 81.4 | 7.4 | 1.0 |
| 2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | | | | | | |
| அனைத்து வர்த்தகத்திலுள்ள கூலி நிர்ணய சபை | 977.6 | 1000.4 | 97.8 | 94.3 | 2.3 | -3.6 |
| வேளாண்மைத் தொழிலாளர்கள் | 1116.0 | 1142.7 | 111.7 | 107.7 | 2.4 | -3.6 |
| கைத்தொழில் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | 829.2 | 857.2 | 83.0 | 80.8 | 3.4 | -2.7 |
| பணிகளிலுள்ள தொழிலாளர்கள் | 559.7 | 559.7 | 56.0 | 52.8 | - | -5.7 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: தொழில் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

பொருளாதார நடவடிக்கைகளுக்காக கூலிச் சபைகள் உள்ளன. தற்போது செயற்படும் 34 கூலிச்சபைகள் உள்ளன. 2000ஆம் ஆண்டில் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் வர்த்தகம் ஆகிய வகைகள் தொடர்பாக பெயரளவு ஆகக் குறைந்த கூலிகள் பலதரப்பட்ட வீதங்களில் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. சுட்டெண்ணில் நேரிணையான அதிகரிப்புக்கள் முறையே 2.4 சதவீதமாகவும், 3.4 சதவீதமாகவும் காணப்பட்டன. எனினும் பணிகள் துறையின் ஆகக் குறைந்த கூலிகள் திருத்தப்படவில்லை. இதன் விளைவாக பொதுவான துறைக்கான கூட்டுச் சுட்டெண் 2.3 சதவீத அதிகரிப்பை எய்தியது. எனினும் உண்மைக் கூலிவீதச் சுட்டெண் (பெயரளவுக் கூலி வீதச்சுட்டெண் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் சுருக்கப்பட்டது) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 3.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பெயரளவு அதிகரிப்பைவிட ஆண்டுச் சராசரி பணவீக்க வீதம் உயர்வாகக் காணப்பட்டமையே இதற்கான காரணமாகும். இத்துறையின் அனைத்து வகைகளும் உண்மைப் பெறுமதி மோசமடையும் இந்த பொதுப் பண்பை வெளிக்காட்டின. இவ்வாண்டில் பணிகள் துறையின் பெயரளவுக் கூலிகள் மாற்றமின்றிக் காணப்பட்டமையினால் இத்துறையின் உண்மைக் கூலிகள் மோசமடைதலானது ஏனைய துணைத் துறைகளைவிட அதிகமாகக் காணப்பட்டது.

பொதுவான முறைசார்ந்த தனியார் துறையில் பொதுவான கூலி அபிவிருத்திகளை ஆகக்குறைந்த சம்பளங்கள் பிரதிபலிப்பதில்லை குறிப்பாக

தேர்ச்சிபெற்ற, தொழில்துறைசார்ந்த மற்றும் முகாமைத்துவ மட்டங்கள் போன்ற சில தொழில் வகைகள் பணவீக்கம் காரணமாக உண்மைக் கூலிகளில் ஏற்படும் தேய்வுகளுக்கு இழப்பீடுகளை அனுபவிக்கின்றன. எனவே, குறிப்பிடக்கட்ட இக் காலப்பகுதியில் உண்மை நியதிகளில் இத்துறையின் ஆகக் குறைந்த கூலிகள் மோசமடைந்திருந்தாலும் கூட நிலையான உண்மைக் கூலிகள் அல்லாவிடினும் உண்மைக் கூலிகளில் அதிகரிப்புக்களை இந்த வகையினர் அனுபவித்திருக்கக்கூடும்.

## முறைசாரா தனியார்துறை

பொருளாதாரத்தின் முறைசாராத்துறையின் நாளாந்தக் கூலிகள் சம்பந்தப்பட்ட தரவுகள் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறையொன்றின் ஊடாக சேகரிக்கப்படுகின்றன. இந்தத் தகவல்களின்படி பொருளாதார நடவடிக்கைகளின் முறை சாராத்துறையின் நாளாந்தக் கூலிகள் இவ்வாண்டில் பலதரப்பட்ட வீதங்களில் அதிகரித்ததுடன் பெரும்பாலான வகையினருக்கான உண்மைக் கூலிகளில் அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இறப்பர் பயிரிடலுக்கான பெயரளவுக் கூலிகள் 11 இலிருந்து 21 சதவீதம் வரையிலான வீச்சிலும் நெற் பயிர்ச்செய்கைக்கான பெயரளவுக் கூலிகள் 8 இலிருந்து 13 சதவீதம் வரையிலான வீச்சிலும் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கான பெயரளவுக் கூலிகள் 7 இலிருந்து 19 சதவிதம் வரையிலான வீச்சிலும் தெங்குப் பயிர்ச்செய்கைக்கான பெயரளவுக் கூலிகள் 7 இலிருந்து 15 சதவீதம் வரையிலான வீச்சிலும் கட்டுமானக் கைத்தொழிலுக்கான பெயரளவுக் கூலிகள் 7 இலிருந்து 11 சதவீதம் வரையிலான வீச்சிலும் அதிகரித்தன. இவ்வனைத்து தொழில் வகைகளும் இவ்வாண்டில் உண்மைக் கூலிகளில் அதிகரிப்பைப் பதிவு செய்தன.

தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டவாறு அண்மைக்கால சம்பள அதிகரிப்புக்கள் உயர்ந்த உள்நாட்டுக் கேள்வியின் ஊடாக விலைகளின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தின. முறைசார்ந்த தனியார்துறை நிறுவனங்கள் சில தமது சம்பளச் சீராக்கங்களையும் ஏனைய ஊதியங்களையும் உற்பத்தியாக்கத்துடன் இணைத்தபோதும் அரசதுறைச் சம்பளங்கள் அவ்வாறு இல்லாததனால் விலைச் சம்பள சுழற்சியினை விளைவிக்கின்றன. எனவே அத்தகைய அதிகரிப்புக்கள் உற்பத்தியாகத்துடன் இணைக்கப்பட்டாலன்றி எந்த ஒரு துறையிலும் உண்மைக் கூலிகளின் அதிகரிப்பானது நீண்ட காலத்தில் எதிர்ச்செயலாற்றத்தைக் கொண்டிருக்கும்.